விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 126 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 11 திங்கட்கிழமை (24.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### நெடுந்தீவு கொலையாளியை
## 48 மணிநேர பொலிஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை படுகொலை செய்து, 100 வயதான வயோதிப பெண்மணிக்கு கடும் காயங்களை விளைவித்து, கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான நபரை 48 மணி நேர பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

நெடுந்தீவில் ஐவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த

15



### பணத் தேவைக்காக நகையை அபகரித்தேன்
## சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்
### நெடுந்தீவு கொலையாளி வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

பணத் தேவைக்காக நகையை அபகரித்ததோடு சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன் என நெடுந்தீவு கொலையாளி பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

நெடுந்தீவு மாவிலி

15

# தமிழர் தாயகத்தில் நாளை கடையடைப்பு

- அனைத்து தரப்பினரும் ஆதரவு
- இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம் அடையலாம்

*(யாழ்ப்பாணம்) தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் பௌத்த - சிங்கள மயமாக்கலை கண்டித்து நாளை 25ஆம் திகதி வடக்குக் கிழக்கு தழுவிய ரீதியில் பொது கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.*

குறித்த கடையடைப்பு போராட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வடக்குக் கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவ மயமாக்கும் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இக் கடையடைப்புப்

02



## கொலையாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்க வேண்டும்
### நெடுந்தீவில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கொலைக் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும் என வலியுத்தி மாபெரும் மக்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மாவிலி துறைமுகத்திலிருந்து, நெடுந்தீவு பிரதேச செயலகம் ஊடாக நெடுந்தீவு பொலிஸ் நிலையம் வரை இடம்பெறவுள்ளது.

15

### விவசாயிகளுக்கு நிவாரணம்
## 11 மில்லியன் ரூபாய் அரசால் ஒதுக்கீடு

(கொழும்பு)

சிறுபோகத்தில் நெற்பயிர்செய்கைக்கான விவசாயிகளின் உர கொள்வனவுக்கு, நிவாரணம் வழங்க 11 பில்லியன் ரூபாய் அரசாங்கத்தினால் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக விவசாய அமை

15

## வெப்பமான காலநிலை
### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வெப்பமான காலநிலை குறித்து வளி

15

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு மேலும் பங்களிப்பு வழங்கப்படும்
### ஜனாதிபதியிடம் உறுதியளித்தது சீனா

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதுடன் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு மேலும் பங்களிப்பு வழங்கப்படும் என சீனா ஜனாதிபதி ரணில்

15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
கொழும்பு றோயல் கல்லூரியின்
**பரீட்சை வினாத்தாள்**
உள்ளே ☛



### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில்
## மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றம் தொடர்பில் ஆராய
### ஜனாதிபதியை இன்று சந்திக்கிறார் விஜயதாஸ

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று ஜனாதிபதியை சந்திக்கவுள்

15

### மாணவர்களை இலக்கு வைத்து
## மாவா பாக்கு விற்பனை
### யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஊரெழு மற்றும் உரும்பிராய் பகுதிகளில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மாவா போதை பாக்கை விற்பனை செய்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 100 ரூபாய் பெறுமதியான 250 மாவா

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தமிழர் தாய...

போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 7 தமிழ் கட்சிகள் ஒனறிணைந்து இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

## சென்னை சூப்பர் கிங்ஸ் வெற்றி

கொல்கத்தாக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் விளையாடிய சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 235 ரன்கள் எடுத்தது. 236 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவர்கள் முடிவில் 186 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது.போட்டியின் ஆட்ட நாயகனாக ரகானே தெரிவானார். (ம-7)




## பதவி வெற்றிடம்

- தமிழ் ரைப்பிங்/ பக்க வடிவமைப்பாளர்
  அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் (இருபாலாரும்)
- அலுவலகச் செய்தியாளர்
  (இருபாலாரும்)
- இயந்திர இயக்குநர்/பயிலுநர்
  (ஆண்கள்/ இரவுக் கடமை)

யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**

யா/நெல்லியடி மத்திய கல்லூரி
**நூற்றாண்டு விழா**

**பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல்**

**காலம்: 2023.04.29, சனிக்கிழமை மு.ப.9.30 மணி**

- விளையாட்டு மற்றும் கலை, பண்பாட்டு நிகழ்வுகள்
- விழிப்புணர்வுக்கான நிகழ்வுகள்
- பரிசளிப்பு நிகழ்வுகள்
- நூற்றாண்டு மலர் வெளியீடு
- கல்லூரிக்கான பௌதிகவள அபிவிருத்திச் செயற்பாடுகள்

(C-6420)

கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளை எதிர்வரும் ஜுலை மாத இறுதியில் அனைவரதும் ஆக்கபூர்வமான பங்களிப்போடு சிறப்பாக நடத்துவதற்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

அணியணியாய் எழுவோம்! கரங்கோர்ப்போம்!
– பழைய மாணவர் சங்கத்தினர்


## கண்ணீர் அஞ்சலி



கொட்டடி சீனிவாசம் வீதியை பிறப்பிடமாகவும் கனடா ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி
**மகேஸ்வரி தியாகராஜா**

அவர்கள் கனடாவில் காலமானார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.04.2023 அன்று காலை நடைபெற்றது.
இவரது இழப்பையிட்டு கொட்டடி சீனிவாசம் வீதியை சேர்ந்த நிரந்தர குடியிருப்பாள்கள் அனைவரும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

(15347)

தகவல்: லயன் கலாநிதி நா.தனேந்திரன்

## மரண அறிவித்தல்



அல்லையம்பதி,
துன்னாலை கரவெட்டி.

### திருமதி சந்திரசேகரம் தவமணிதேவி

அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேகரம் தவமணிதேவி அவர்கள் நேற்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - மாணிக்கம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வடிவேலு - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சந்திரசேகரத்தின் (உரிமையாளர் - வடிவேலர் மணிமண்டபம், அல்லையம்பதி, கௌரி ரேடர்ஸ் - கொழும்பு) பாசமிகு துணைவியும் சுபோதினி, சிவாஜினி, சதீசன், சபேசன், சுரேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி, குருபரன், சியா, நிவாசினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிறேம், நிசாந்தி, திவ்யா, சிடோனிக்கா, நிவானி, சுஜன், சபித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஞ்சோசனா, ஆருஷி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அல்லையம்பதி, துன்னாலையில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் நாளை (25.04.2023) செவ்வாய்க்கிழமை நடைபெற்று புகழுடல் மாலை 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-6418)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு வேண்டுகோள்



(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட நீரை குடிப்பதற்கும் சமைப்பதற்கும் மட்டும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் கடுமையான வெப்பத்துடனான காலநிலை நீடித்து வருவதனால் நீரிற்கான தேவை வெகுவாக உயர்வடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாய செய்கைகளுக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் குடிநீரை பயன்படுத்த வேண்டாம் என சபையின் பொது முகாமையாளர் வசந்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.

நீர் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ள காரணத்தினால் உயரமான இடங்களுக்கு உரிய அழுத்தத்துடன் நீரை விநியோகிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் நீர் விநியோக கத்தை வரையறுப்பதற்கு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முடியும்

## நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

**மிகவும் சர்ச்சைக்குரிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தின் ஊடாக திருத்தங்களையோ அல்லது மாற்றங்களையோ மேற்கொள்ள முடியும் என நீதி அமைச்சர் தெரிவித்தார்.**

எனவே சட்டமூலம் தொடர்பில் எவரும் அச்சமோ அதிருப்தியோ கொண்டிருக்க தேவையில்லை என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் உள்ள சில விதிகள் குறித்து உலக மற்றும் உள்ளூர் சமூகம் எழுப்பியுள்ள கவலைகள் குறித்தும் அரசாங்கம் கவனத்திற்கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை 1979 ஆம் ஆண்டுக்கு பின்னர் வந்த அரசாங்கங்கள் தங்களின் தனிப்பட்ட மற்றும் அரசியல் ஆதாயங்களுக்காக தவறாகப் பயன்படுத்துகின்றன.



ஆகவேதான் கடுமையான சட்டமாக முத்திரை குத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டிற்கு மாற்றீடாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவர எதிர் பார்த்திருப்பதாக கூறினார்.

பயங்கரவாத முயற்சிகளைத் தடுக்கும் நோக்கத்துடன் அடிப்படை, மனித மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளின்படி வரைவு செய்யப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

வாக்குமூலங்களை ஆதாரமாக 'ஏற்று சந்தேகநபருக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்வது போன்ற பெரும்பாலான விதிகள் புதிய சட்டமூலத்தில் நீக்கப்பட்டுள்ளன என நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

நல்லிணக்கம் மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பயன்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் விஜயதாஷ ராஜபக்ஷ தெரிவித்தார். (4)

### மாவை கலட்டி அருள்மிகு

# ஸ்ரீ பராசக்தி அம்மன் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவை கலட்டி, தெல்லிப்பழை பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான சோபகிருது வருட வருடாந்த மஹோற்சவம் இன்று 24 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் நடைபெறும் திருவிழாவில் மே மாதம் 4 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் 5 ஆம் திகதி தீர்தோற்சவமும் 6 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவுறும்.

மஹோற்சவ காலங்களில் காலை, மாலை அம்பாள் திருவீதி உலா வந்து அடியவர்க்கு அருளாசி வழங்குவார் எனவும் தொடர்ந்து பன்னிரெண்டு நாட்களும் மகேஸ்வர பூசை இடம்பெறும் எனவும் ஆலய தர்மகர்த்தா அறியத் தந்துள்ளார். (4)

# புதிய எல்லை நிர்ணய அறிக்கையின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

புதிய எல்லை நிர்ணய அறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

உள்ளூராட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4,714 ஆகக் குறைக்க எல்லை நிர்ணய ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதன் மூலம், 8,000 க்கும் அதிகமான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும், புதிய எல்லை நிர்ணய அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமாயின், அது குறித்த பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.

இது தொடர்பாக ஆளுங் கட்சி உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரத்து செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்

# இழப்பீடு கோரி சிங்கப்பூரில் இன்று வழக்குத் தாக்கல்



(கொழும்பு)

கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இன்று வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் சிங்கப்பூரில் உள்ள சட்ட நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் இலங்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாகவும் சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

இழப்பீடு தொகை குறித்து பின்னர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படும் என சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையிடம் இருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# கொழும்பில் ஒருவர் வெட்டிக்கொலை


(கொழும்பு)

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வல வீதிப் பகுதியில் நேற்று அதிகாலை நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான இருவரும் களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், அவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் தாக்குதலில் காயமடைந்த 53 வயதுடைய நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் தெனியாய பொரலுவாய பிரதேசத்தில் வசிப்பவர் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கொலைக்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. (4)

# தாமரைக் கோபுரத்தின் பெயரை மாற்ற முடிவு?



(கொழும்பு)

கொழும்பு தாமரைக் கோபுரத்தின் பெயரில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தாமரைக் கோபுரத்தின் பெயரிலிருந்து "தாமரை" பகுதியை நீக்கி, அதன் பெயரை "கொழும்பு கோபுரம்" என மாற்றுவதற்கான பிரேரணை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயரமான கோபுரத்திற்கு தாமரை என்ற பெயர் ஏற்புடையதல்ல என்பதே பெயரை மாற்றக் காரணம் என கூறப்படுகின்றது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில் 28 - 03 - 1962

விண்ணில் 22 - 04 - 2023

## திருமதி துஸ்யந்தி இராமலிங்கம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துஸ்யந்தி இராமலிங்கம் அவர்கள் 22.04.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா - அம்பிகாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் சுன்னாகம் கப்பல் வளவினைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகளும் மார்க்கண்டு இராமலிங்கம் (இளைப் பாறிய கிராம சேவையாளர் - சுன்னாகம் கிழக்கு) அவர்களின் பாசமிகு மனைவியும் குமரன் (பொலிஸ் உத்தியோகத்தர் - கொழும்பு), ரஜீவன் (கனடா), ஜெனகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திஷாரதியின் மாமியாரும் பர்ஜித், மஹஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காண் டீபன், தமயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமாரி, காலஞ்சென்ற சுந்தரரூபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (26.04.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் சுன்னாகம் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கப்பல் வளவு
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (C-6422)

தகவல்:
குடும்பத்தினர்

# கயிறு இழுத்தல் போட்டியில் கம்பஹாவை வீழ்த்திய யாழ். அணிகள்



யாழ்ப்பாண ஆண்கள் மற்றும் பெண்கள் அணி யினருக்கும் கம்பஹா ஆண் கள் மற்றும் பெண்கள் அணி களுக்கும் இடையே தனித் தனியே நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியில் கம்பஹா அணிகளை வீழ்த்தி யாழ். அணிகள் வெற்றி மகுடம் சூடின.

கம்பஹாவில் உள்ள சூரிய நிறு வகத்தின் கல்வி நிலையத்தில் நேற்று முன்தினம் புத்தாண்டு கொண் டாட்டம் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன.

போட்டிகளின் இறுதியில் கயிறு இழுத்தல் போட்டி நடைபெற்றது.

இதில் ஆண்கள் பெண்கள் என இரு பிரிவினர் பங்குபற்றினர்.

அந்தவகையில் கம்பஹா பெண் களின் அணியை வீழ் த்தி யாழ்ப்பாண பெண்கள் அணியினர் வெற்றி வாகை சூடினர்.

அடுத்ததாக யாழ்ப்பாண ஆண்கள் அணிக்கும் கம்பஹா ஆண்கள் அணிக ளுக்கும் இடையே கடுமை யான போட்டி நடைபெற் றது.

இதில் கம்பஹா ஆண் கள் அணியினர் ஏ மற்றும் பி என இரு பிரிவுகளாக பங்குபற்றினர்.

யாழ்ப்பாண அணிக்கும் கம்பஹா ஏ அணிக்கும் இடையே நடைபெற்ற நாண யச் சுழற்சியில் வெற்றி பெற்ற கம்பஹா ஏ அணி நேரடியாக இறுதிச் சுற்றுக்கு தெரிவானது.

அடுத்தபடியாக கம்பஹா பி அணிக் கும் யாழ்ப்பாண அணிக்கும் இடையே நடைபெற்ற பலப்பரீட்சையில் யாழ்ப் பாண அணியினர் வெற்றியீட்டி இறுதிச் சுற்றுக்கு தெரிவாகினர்.

இந்நிலையில் யாழ்ப்பாண அணிக் கும் கம்பஹா ஏ அணிக்கும் இடையே மிகவும் சுவாரஸ்யமான போட்டி நடை பெற்றுக் கொண்டிருந்தபோது யாழ்ப் பாண அணியினர் தம் பக்கமாக கயிற் றினை இழுத்து முன்னேறினர். இதன் போது கயிறு இரண்டாக அறுந்தது.

இதன்போது இரண்டு அணிகளும் வெற்றி பெற்றதாக நடுவர்களால் அறி விக்கப்பட்டது.

அதன் பின்னர் வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசில்களை பாராளு மன்ற முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வழங்கி வைத்தார். (4-104)

# 60 வது பிறந்தநாள் நினைவலைகள்

## சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் BA. MA

சைவசித்தாந்த பண்டிதர், பாலசோதிட சிந்தாமணி, அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் தலைவர், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன், தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்



புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே! (எ.மெ)

சோடச உபசார ராகங்களே – எங்கள்
சோமாஸ்கந்த ஐயா புகழ் பாடுங்களே
கனவான கலியுக ராகங்களே – எங்கள்
கண்ணன் ஐயா புகழைப் பாடுங்களே

நெல்லண்டைப் பதிதன்னில் நிலை கொண்டவர்
நல்ல சிலையாகிச் சில இடத்தில் உறைந்திட்டவர்
எல்லார்க்கும் மதிப்பாக நடந்திட்டவர்
எங்கள் இதயத்தில் என்றென்றும் வாழ்கின்றவர்

மேடராசி அச்சுவினி நட்சத்திரம் – அவர்
மேலான தன்மைக்குப் பிருந்தவானம்
புவனேசு அம்மாவின் புனிதத்தனம் – அவர்
புகழுக்கு வித்திட்ட பூங்காவனம்

தொடுவானம் இல்லாது இருள் சூழ்ந்தது – அது
சொல்லாமல் கொள்ளாமல் மழை பெய்தது
எல்லோர்க்கும் ஏதேதோ இடர் தந்தது – இந்த
இடர்பாட்டில் காலங்கள் கரைந்தோடுது

அமரர் தியாக.சோமாஸ்கந்த ஐயாவின்
இரண்டாவது ஆண்டு நினைவையொட்டி
இப்பாடல் இடம்பெறுகின்றது

ஆக்கம் :- திருக்குறள் கலாநிதி
ஆ.வடிவேலு (C-6421)



குடும்பத்தினர் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுங்கள்

## சிவில் சமூக பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அழுத்தம்

(கொழும்பு)

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட மூலத்தை முற்றாக நிராகரிக்குமாறு வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை நடத்திவரும் சிவில் சமூகப்பிரதிநிதிகள், அச்சட்டமூலத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றனர்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறு எதிர்க்கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், அச்சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைவிட மிக மோசமான இச்சட்டமூலத்தை அரசாங்கம் முழுமையாக வாபஸ் பெற வேண்டுமென மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

அதன் ஓரங்கமாக சிவில் சமூக உறுப்பினர்கள் சிலர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை நடத்தி வருவதாகவும் அவர்களிடம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் மிக மோசமான தன்மை குறித்து விளக்கமளித்து வருவதாகவும் அறியமுடிகின்றது.

அதுமாத்திரமன்றி உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்துக்கு எதிராக நிலைப்பாட்டை எடுக்குமாறு தாம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு அழுத்தம் பிரயோகித்து வருவதாகவும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (4)



நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் ராம்குமார் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

# கடன் அட்டை பாவனை

## கணிசமாக குறைவு- மத்திய வங்கி

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் இலங்கையில் கடன் அட்டைகளின் பாவனை கணிசமாக குறைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2022 டிசெம்பர் இறுதிக்குள், இலங்கையில் செயலில் உள்ள கடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 52,991 இலட்சம் எனவும், இந்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள், இலங்கையில் செயற்பாட்டில் உள்ள மொத்த கடன் அட்டைகளின் எண்ணிக்கை 42,272 இலட்சமாக இருந்தது.

இதேவேளை, பெப்ரவரி மாதத்திற்குள் அது மேலும் 40,872 இலட்சமாக குறைந்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த அட்டைகளுக்காக செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை இந்த ஆண்டு ஜனவரி இறுதிக்குள் 1 மில்லியன் 42,061 மில்லியன் ரூபாவாகவும், பெப்ரவரி மாத இறுதியில் 41,001 மில்லியன் ரூபாவாகவும் குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 27.03.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்.கந்தையா இரகுநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.04.2023) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ளதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (26.04.2023) புதன்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-6415)

கச்சாய் வடக்கு, கொடிகாமம்.

077 402 9467

இங்ஙனம், குடும்பத்தினர்.


# இராசிபலன்

24.04.2023
சித்திரை 11 , திங்கட்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.02 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 3.32 மணவரை
சுபநேரம் -12.00-1.30 மணிவரை
இராகுகாலம்- 7.30-9.00 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்- விசாகம்.

வளவன்

**மேஷம்** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** மன நிறைவான செய்தியொன்று வந்து சேரும் நாள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க திட்டங்கள் தீட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மீனம்** அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

நற்குணம் உள்ள இடத்தில் வணக்கமும் இன்சொல்லும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 132

# உனக்குள் ஒழிந்திருக்கும் திறமையை வெளிப்படுத்து



ஒரு புகை வண்டி நிலையத்தில் பிச்சைக்காரன் ஒருவன் தனது கைப் பை நிறைய பென்சில்களை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். ஒரு கணவான் அந்த வழியாகச் சென்றபோது 5 ரூபாய் நாணயத்தை பிச்சைக்காரனின் திருவோட்டில் போட்டார். பிறகு புகைவண்டியில் ஏறி அமர்ந்தார்.

அவரது மனதில் ஒரு கருத்து உதித்தது. எழுந்து வேகவேகமாக அதே பிச்சைக்காரனிடம் சென்று. "அவனது பையிலிருந்த பென்சில்களை எடுத்துக் கொண்டு 5 ரூபாய்க்குச் சமமான பென்சில்களை எடுத்துக் கொள்கிறேன். என்ன இருந்தாலும் நீயும் தொழில் செய்கிறாய் அல்லவா?", என்று கூறிவிட்டு புகைவண்டியில் தனது இருக்கைக்குத் திரும்பினார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த கணவான் ஒரு விருந்தில் கலந்து கொள்ளச் சென்றார். அந்த விருந்தில் 6 மாதங்களுக்கு முன்னாலே ரயில்நிலையத்தில் பிச்சையெடுத்துக் கொண்டு இருந்தவனும் அமர்க்களமான கோட் மற்றும் டை சகிதமான உடையில் கனகச்சிதமான கணவானாக விருந்தில் பங்குகொள்ள வந்து இருந்தான். அவன் இந்தக் கணவானை அடையாளம் க்ண்டு கொண்டு இப்படிக் கூறினான்.

அன்பரே.. நீங்கள் என்னை மறந்து போயிருக்கலாம். ஆனால் நான் உங்களால்தான் இப்படி நல்ல நிலைமைக்கு வந்து இருக்கிறேன். நான் நல்ல நிலைமைக்கு வருவதற்கு நீங்க தான் காரணம்." அந்த கோட் சூட் வாலிபன் கணவானிடம் பழைய நிகழ்வுகளை நினைவூட்டினான்.

எனக்கு நினைவு வந்துவிட்டது. இப்போது என்ன செய்கிறாய். உடைகளிலும் நல்ல மாற்றம் தென்படுகிறது என்னப்பா?". என்று கேட்டார்.

நீங்கள்தான் என்னுடைய மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் காரணம். என்னுடைய வாழ்நாளிலே உங்களை மறக்க முடியாது. என் வாழ்க்கையில் என்னை ஒரு மனிதனாக மதித்த முதல் மனிதர் நீங்கள்தான். 5 ரூபாவை எனது திருவோட்டில் இட்ட பின் சிறிது நேரத்திற்குப் பிறகு வந்து அந்த ரூபாய்க்குச் சமமான பென்சில்களை என்னிடமிருந்து பெற்றுச் சென்றீர்கள் எனக்குள் ஒழிந்திருந்த வியாபாரி அப்போதுதான் எனக்கே தெரியவந்தான். அதுவரையில் பிச்சையெடுத்துத் திரிந்த நான் அந்த ஒரு நிமிடத்தின் தாக்குதலில் ஒரு வியாபாரியாக உருவெடுத்து உழைக்க ஆரம்பித்தேன்.


"அந்த ஒரு நிமிடத்துக்கு முன்னர் வரையில் சோம்பேறியாக அழுக்காக புகைவண்டி நிலையத்தின் பிச்சைக்காரர்களின் வரிசையில் ஒருவனாக யாராலும் மதிக்கப்படாத, உருப்படாதவனாக இருந்த நான் உங்கள் நடவடிக்கையால் திருந்தினேன்.

என்னுள்ளே சாக்ரடீஸின் கொள்கைகளைத் தூண்டி விட்டவர் நீங்கள்தான். பிறகுதான் சிந்திக்க ஆரம்பித்தேன். "நான் யார்? எனது கொள்கை என்ன? எதற்காகவோ பிறந்துவிட்டேன். ஆனால் சாகும் போதாவது எதையாவது சாதித்து விட்டுச் சாகலாமே என முடிவெடுத்தேன். பிச்சையெடுப்பதை நிறுத்தி எனது புதிய வாழ்க்கையை ஆரம்பித்தேன். நான் உங்களுக்கு நன்றி கூறுவதற்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். நன்றிகள் பல கோடி அய்யா", என்றான்.

அனைவருக்குள்ளும் ஏதாவது ஒரு திறமை ஒழிந்திருக்கும். அதை சரியான நேரத்தில் பயன்பயன்படுத்தினால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# தென்மராட்சியில் மினி சூறாவளி மரங்கள் முறிவு, வீடுகள் சேதம்



(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வரணி நாவற்க்காடு பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் வீசிய கடும் காற்று காரணமாக ஆலயம் மற்றும் வீடு ஆகியன சேதமடைந்துள்ளன.

திடீரென வீசிய காற்றினால் நாவற்காட்டில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றின் மேற்கூரை தூக்கி வீசப்பட்டிருப்பதுடன் தென்னை மற்றும் பனை மரங்கள் முறிந்து வீடுகளும் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் மரங்கள் வீதிகளில் முறிந்து விழுந்து போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டது டன் மின்சாரமும் சிறிது நேரம் தடைப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (4-30)

# கொலையை தடுக்க முயன்ற நாய் மீதும் வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நெடுந்தீவில் ஐந்து முதியவர்களை வெட்டி படுகொலை செய்தவர்கள் வீட்டில் நின்ற நாய் ஒன்றினையும் வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

நெடுந்தீவு இறங்குதுறைக்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று முன் தினம் சனிக்கிழமை ஐந்து முதியவர்கள் வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டனர். ஒரு முதியவர் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் வீட்டில் நின்ற அவர்களின் வளர்ப்பு நாய் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் மீட்கப்பட்டுள்ளது.



நாய் தனது எஜமானர்களை காப்பாற்ற போராடிய போது நாய் மீது கொலையாளிகள் தாக்குதல் நடத்தி வெட்டிக் காயத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அதேவேளை கொலையான ஒருவரின் அடையாள அட்டை வீட்டின் வெளியே காணிக்குள் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன் , திறப்பு ஒன்றும் வெளியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப் பட்டுள்ளது. (4)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு காவுவண்டி மூலம் வீதியில் திடீரென சுகவீனமுற்ற சுமார் 70 வயது மதிக்கத்தக்க கிருஸ்ண பிள்ளை என்பவர் கடந்த 20 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

அனுமதிக்கப்பட்ட போது சடுதியாக பார்வைப் புலன் இழந்ததாகவும் உரையாடுவதற்கு சிரமப்பட்டதாகவும் கூறினார். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்றைய தினமே இடமாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி 22 ஆம் திகதி விடுதி 10 இல் இறந்து விட்டார். இவரின் மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

இவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.இச் சடலம் இதுவரையிலும் யாராலும் உரிமை கோரப்படவில்லை.

இவர்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் இன்மையினால் குறித்த சடலத்தினை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

## யாழ். போதனாவிற்கு

# 5 கோடி பெறுமதியான மருத்துவ இயந்திரம் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)
சர்வதேச மருத்துவ நல அமைப்பின் ஒருங்கிணைப்பில் ராஜ்ராஜரட்ணத்தின் ரூபாய் 5 கோடி நிதி அனுசரணையில் புதிய Laparoscope இயந்திரம் கையளிக்கப்பட்டது.

இக்கருவி மூலம் வயிற்றுப் பகுதியில் இல்குவாக பல குழாய் மூல சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்.

சத்திரசிகிச்சைக்காக வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்படாது. மற்றும் வயிற்றின் வெளிப்புறம் மற்றும் உட்புற பகுதியில் இரத்த இழப்பு மிகக் குறைவாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட நோயாளி மேற்படி சிகிச்சைக்குப் பின்னர் மிக விரைவாக குணமடைந்து விடுவார். சத்திரசிகிச்சை நிபுணர்கள் நுட்பமாக இந்த சிகிச்சையை செய்வதனால் நோயாளிகளுக்கு மிகவும் சரியான முறையிலான சிகிச்சை பலன் கிடைக்கும். (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியை ஏற்கும் தைரியம் சஜித் பிரேமதாஸவிற்கு இல்லை

## என்கிறார் அமைச்சர் பிரசன்ன

(கொழும்பு)

அரசியலமைப்புக்கு அமைய ஆட்சிமாற்றம்ஏற்படும்வரை ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் மாற்றம் ஏற்படாது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவி வழங்க வேண்டிய தேவை ஏதும் கிடையாது.

நெருக்கடியான சூழலில் தலைமைத்துவத்தை ஏற்கும் தைரியம் அவருக்கு கிடையாது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடுவலை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தவறான செய்திகள் வெளியாகியுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் தினேஷ் குணவர்தனவை பிரதமராக நாமே தெரிவு செய்தோம். ஆகவே, பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்ய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அரசியலமைப்புக்கு அமைய ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை ஜனாதிபதி, பிரதமர் பதவிகளில் மாற்றம் ஏற்படாது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் நாட்டை வழமைக்கு கொண்டு வந்துள்ளார். ஆகவே, ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கூட்டணியாக போட்டியிட எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தார். (4)

# முப்படைகளுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

(கொழும்பு)

2022 ஜூலை 9 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக இலங்கையின் முப்படைகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டனர்.

இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப் படையின் பிரதிநிதிகள் இருவரும் நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகிய போதும் இராணுவம் விசாரணையில் பங்கேற்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பிலான விசாரணைக்காக வேறு ஒரு திகதியை வழங்குமாறு இராணுவம் கேட்டு கொண்டதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் தனிப்பட்ட இல்லம் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்ட போது போதிய அளவு பாதுகாப்பு வழங்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. (4)

# முல்லை.வவுனிக்குளத்தில் 204 ஏக்கர் நெற்செய்கைக்கு மாத்திரம் அனுமதி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் வவுனிக்குள நீர்ப் பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 12 குளங்களுக்குமான போதிய நீர்வரத்து இல்லாத நிலை காணப்படுகின்றது.

முத்தையன் கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்களுக்கும் போதிய நீர்வரத்து காணப்பட்டுள்ள நிலையில் அதிகளவில் விவசாயிகள் நெற் செய்கையினை மேற்கொண்டு வருகின்றார்கள். தற்போது சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் வவுனிக் குளத்தின் கீழ் 6060 ஏக்கர் நெற்செய்கை காணிகள் பதிவில் காணப்பட்ட போதும் குளத்தின் நீர்மட்டம் தற்போது 12.5 அடியாக காணப்படுகின்றது. இந்த நிலையில் காலபோக நெற்செய்கை நிறைவடைந்துள்ளதை தொடர்ந்து மழையினை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே காணப்பட்டுள்ளது.

மழை இல்லாததால் நீர்வரத்து இல்லாத நிலையில் 204 ஏக்கரில் நெற்செய்கையினை மேற்கொள்ள வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (4-315)

# ஆசியாவில் அதிக நீரிழிவு நோயாளர்களை கொண்ட நாடாக இலங்கை

(கொழும்பு)

ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயாளிகளைக் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சுகாதார கொள்கை நிறுவனம் மற்றும் ரஜரட்ட ருஹுனு கொழும்பு பல்கலைக் கழகம் இணைந்து நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு, அதாவது 23% பேருக்கு நீரிழிவு நோய் இருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில், அந்த எண்ணிக்கை 31% ஆக அதிகரித்துள்ளது. அதாவது மூன்று பெரியவர்களில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். (4)

# கடன் மறுசீரமைப்புக்கான திட்டம் அரசிடம் எதுவும் இல்லை

## பேராசிரியர் வசந்த அத்துகோரள

(கொழும்பு)

உள்ளூர் கடனை மறுசீரமைக்க அரசாங்கம் தயாராக இருந்தாலும் அதற்கான சரியான வேலைத்திட்டம் இல்லை.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இதுவரை எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

மேலும், உள்ளூர் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் முதலில் தேவைப்படுவது முறையான நடைமுறை ஆய்வை மேற்கொள்வதே எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# இலத்திரனியல் கொள்வனவு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள்

## *நிதி அமைச்சு அறிவிப்பு*

(கொழும்பு)

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையின் அடிப்படையில் இலத்திரனியல் கொள்வனவு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட சபைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மே மாதம் முதலாம் திகதி முதல் 300 மில்லியனுக்கும் அதிகமான கொள்முதல் அறிவிப்புகள் இலத்திரனியல் மூலம் அறிவிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

200 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள ஒப்பந்தங்களின் விபரங்கள் வரி அமைச்சினால் சேகரிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படும்.

அடுத்த மாதம் முதல் அமைச்சரவை அளவிலான கொள்முதல் குழுக்களின் நியமனம் இந்த அறிவுறுத்தல்களை நிறைவேற்றிய பின்னரே மேற்கொள்ளப்படும் என பொது நிதி பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக இலங்கை தனது இ-ஜிபி முறையை பல வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியது.

இருப்பினும் பெரும்பாலான அரச முகவர் நிலையங்கள் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வருவாய் நிர்வாகம் மற்றும் கொள்முதல் போன்ற துறைகளில் டிஜிட்டல் மயமாக்கலை விரிவுபடுத்துவதன் மூலம் ஊழலுக்கான வாய்ப்புகளைக் குறைக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 160 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 300 |
| தக்காளி | 100 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 180 | 180 | 280 | 240 |
| கரட் | 160 | 200 | 150 | 300 |
| பூசணி | 60 | 50 | 50 | 40 |
| புடோல் | 140 | 120 | 120 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 200 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 150 |
| லீக்ஸ் | 300 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 240 | 180 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 1200 |
| போஞ்சி | 250 | 200 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 450 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 240 | -- |
| முள்ளங்கி | 60 | 120 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | -- | 150 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டை




(முறிகண்டி)

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிரான கையொப்பம் திரட்டும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வேலைத்திட்டம் கிளிநொச்சி சேவைச்சந்தை பிரதான வாயிலில் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த பணியில் மக்கள் பலரும் கலந்து கொண்டு கையொப்பமிட்டனர்.

குறித்த கையொப்ப பிரதிகளானது, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

குறித்த நிகழ்வினை ஏற்பாடு செய்த இளைஞர் அமைப்பு சார்பில் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் வடிவேல் நகுலேஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பரமநாதன் குராமசிங்கம் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

மேலும், எழுத்தாளர் தீபச்செல்வன் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்ததுடன், பொதுமக்களும் குறித்த சட்ட மூலம் தமக்கு வேண்டாம் என தெரிவித்தனர். (4-100)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர்கள் கைது

(அராலி)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகாம் பகுதியில் அனுமதிபத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இரண்டு டிப்பர் வாகனமும் அதன் சாரதிகளும் நேற்று முன்தினம் பளை விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட டிப்பர் வாகனங்கள் இன்று கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர். (4-104)

# ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு இடம்பெறும்.

அதனை முன்னிட்டு நாளை 25 ஆம் திகதி எண்ணெய்க்காப்பு வைபவம் முற்பகல் 10.30 மணி முதல் மறுநாள் மாலை 4.30 மணி வரை இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (4)

# கைதடியில் விபத்து ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதி ஏ9 வீதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 5மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து கிடுகு ஏற்றிச் சென்ற இருசக்கர உழவியந்திரத்தின் பின்பாக டிப்பர் வாகனம் மோதியதில் இருசக்கர வாகனம் அருகில் இருந்த வயலுக்குள் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது இருசக்கர உழவியந்திர சாரதியான சரசாலை தெற்கைச் சேர்ந்த 53வயதான நபர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானை பகுதியில் உள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணியை துப்புரவு செய்த போதே குறித்த கைக்குண்டு இனங்காணப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக வைத்தியரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2815

Search for people, places and things

## மதுசன்

அவனுக்கு எப்படிப்பட்ட பொண்ணு வேணும்னு கேளு
இந்த வருசம் கல்யாணம் பண்ணி வச்சிருவோம்




## பிரணவன்

கஷ்டப்பட்டு ஒரு பிரச்சினையை
கப்பல்ல ஏத்திவிட்டா




இன்னொரு பிரச்சினை
ராக்கெட்ல வருது என்ன வாழ்க்கைடா இது

## துளசி



மரம் நட வேண்டும் என
மண்டையில் உறைக்கிற மாதிரி
சொல்கிறது வெயில்....

## சௌமிகா



## தாரணி




திடீர்னு
இவ்ளோ
விலையைக்
குறைச்சா
எப்படி ..
ஒரு பதற்றமா
இருக்கா
இல்லையா.

## வித்தியா

நைட்ல சூரியன் மட்டும் தான்
இல்லை.



சூடு அப்படியே தான் இருக்குது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு றோயல் கல்லூரி
# க.பொ.த (சா/த) முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்
# விஞ்ஞானம்

## பகுதி I
எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) கலத்தில் நீர்ச்சமநிலையைப் பேண உதவும் புன்னங்கம்
1. கரு 2. புன்வெற்றிடம்
3. இறைபோசோம் 4. நிறமூர்த்தம்

2) ஒளித்தொகுப்பின் போது பச்சைத் தாவரங்களால் உறிஞ்சப் படும் ஒளியிலுள்ள நிறங்கள்
1. நீலம், பச்சை 2. சிவப்பு, பச்சை
3. சிவப்பு, நீலம் 4. பச்சை, மஞ்சள்

3) இரசாயனத் தாக்கவீதத்தைப் பாதிக்காத காரணி பின்வரு வனவற்றுள் எது? -
1. தாக்கிகளின் தாக்க மேற்பரப்பு
2. தாக்கம் நடைபெறும் வெப்பநிலை
3. தாக்கிகளின் செறிவு 4. தாக்கிகளின் அடர்த்தி

4) பின்வருவனவற்றில் அலகு இல்லாத சோடி
1. திணிவு, முறிவுச்சுட்டி 2. நிறை, திணிவு
3. முறிவுச்சுட்டி, சார்மூலக்கூற்றுத் திணிவு
4. கதி, வேகம்


5) பின்வருவனவற்றுள் ஈரியல்புள்ள ஒட்சைட்டு எது?
1.mgo 2.$Al_2o_3$ 3.$SIO_2$ 4.$CO_2$

6) ஒரு பிள்ளை 5 kg திணிவுடைய பை ஒன்றை நிலைக்குத்தாக 3m உயரத்துக்குத் தூக்கினான். இதற்கு அவனுக்கு 4s எடுத்தது. பிள்ளையின் வலு

1) $\frac{5 \times 10 \times 3}{4}$ W 2) $\frac{5 \times 13}{4}$ W 3) $\frac{5 \times 10 \times 4}{3}$ W 4) $\frac{10 \times 3}{4}$ W


7) பின்வருவனவற்றில் எவ் நுண்ணங்கிக் கூட்டத்தைச் சேர்ந்த தனிக்கல அல்லது பல்கல அங்கிகள் உணவுற்பத்தியை மேற்கொள்ளாது?
1. வைரசு 2. அல்கா 3. பற்றீரியா 4. பங்கசு

8) நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படும் பொருள் ஒன்று மீண்டும் நிலத்தை வந்தடையும் வரையான இயக்கத்தின் வேகநேர வரைபை சரியாகக் காட்டுவது.




9) பின்வருவனவற்றில் அயன்பிணைப்புச் சேர்வைகளைக் கொண்ட கூட்டம் எது?
1. Nacl, KF 2.Nacl , Hcl
3. HN3,CH4 4.KF, H2 O

10) A,B முடிவிடங்களுக்கிடையில் 4 சமவலுத்தடையைக் கொண்ட மின்சுற்று பின்வருவனவற்றுள் எது?




11) மனித உடலில் உள்ள கனியுப்புக்கள் சிலவற்றின் தொழிற் பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A – விற்றமின்களை அகத்துறிஞ்ச உதவுதல்
B – தைரொட்சின் ஓமோன் உற்பத்திக்கு உதவுதல்
C - ஈமோகுளோபின் உற்பத்திக்கு உதவுதல்
மேலே உள்ள தொழிற்பாடுகளை ஆற்றும் கனியுப்புக்கள் முறையே
1. அயடின், பொசுபரசு, கல்சியம்
2. பொட்டாசியம், அயடின், இரும்பு
3. மக்னீசியம், இரும்பு, அயடின்
4. செம்பு, அயடின், இரும்பு

12) பின்வருவனவற்றில் இரசாயனப் பிரிகைத் தாக்கமாக அமைவது


1) $2Mg + O_2 \rightarrow 2MgO$ 2) $Zn + 2HCl \rightarrow ZnCl_2 + H_2$
3) $CaCO_3 \xrightarrow{\Delta} CaO + CO_2$ 4) $2H_2O + 2Na \rightarrow 2NaOH + H_2$

13) வித்துக்களைத் தோற்றுவிக்காத பூக்காத் தாவரங்களைக் கொண்ட கூட்டம்
1. பைனசு, மார்க்காந்தியா, சைக்கஸ்
2. நெபிரோலெபிஸ், டிரைனேரியா, மடுப்பனை
3. பைனசு, சைக்கஸ், டிரைனேரியா
4. மார்காந்தியா, போகனேற்றம், சல்வீனியா

14) நேர்கோட்டில் இயங்கும் 5kg திணிவுடைய பொருள் ஒன்று 5s இல் $4ms^{-1}$ இலிருந்து 14 $ms^{-1}$ வேகத்தை அடைந்தது. இப் பொருளின் மீது பிரயோகிக்கப்படும் சமனறவான விசை யாது?
1. 2.8 N 2. 10 N 3. 20 N 4. 70 N

15) அமோனியா மூலக்கூற்றிலுள்ள தனிச்சோடி இலத்திரன்களின் எண்ணிக்கை
1. 1 2. 2 3. 3 4. 4

16) நேர்கோட்டில் இயங்கும் 1kg திணிவுடைய பொருள் ஒன்று $4ms^{-1}$ சீரான வேகத்தில் குறித்த நேரத்திற்கு இயங்கி பின் சீரான அமர்முடுகலுடன் ஓய்வுக்கு வருகின்றது. இப்பொருளின் அமர்முடுகலையும் அமர்முடுகலுக்கு முன்னரான அதன் உந்தத்தையம் முறையே குறிப்பது.




1. $4ms^{-2}$ , 4 kg $ms^{-1}$ 2. $2ms^{-2}$, 2 kg $ms^{-1}$
3. $8ms^{-1}$, 1kg $ms^{-1}$ 4. $4ms^{-2}$, 4 $ms^{-1}$

17) குறித்தவொரு இயல்புக்கான இரு அங்கிகளின் இதரநுக நிலைகளுக்கிடையே நடைபெறும் கலப்புப் பிறப்பாக்கம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

| புணரிகள் | H | h |
|---|---|---|
| | | |
| H | HH | Hh |
| h | Hh | hh |

H. ஆட்சியான இயல்பு
h. பின்னடைவு இயல்பு

1. 1:1 2. 3:1 3.1:2:1 4. 1:3:1

18) பின்வருவனவற்றுள் எரியக்கூடிய வாயு அல்லாதது
1. $H_2$ 2. $Co_2$ 3.$O_2$ 4. $N_2$

19) யூரியாவின் இரசாயனச் சூத்திரம் $Co(NH_2)_2$ யூரியாவின் சார்மூலக்கூற்றுத் திணிவு யாது?
1. 46 2. 62 3. 60 4. 44

20) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. – வெளிச்சுவாச வளியில் உட்சுவாச வளியை விட அதிகளவு $co_2$ நீராவி காணப்படும்.
B. - தாவரங்களிலும் விலங்குகளிலும் குளுக்கோசு செலுலோசாக மாற்றப்படும் இரசாயனச் செயன்முறை நடைபெறுகின்றது.
C. - உறுத்துணர்ச்சி , கழிவகற்றல் என்பவை விலங்குகளில் அவதானிக்கப்பட்டாலும் தாவரங்களில் முக்கியமானவை அல்ல.
இவற்றுள் மிகப்பொருத்தமான கூற்று

1. A யும் B யும் 2. B யும் C யும்
3. A யும் B யும் 4. Abc அனைத்தும்

21) ஒரு மூல் என்பது
1. C - 12 சமதானிகள் 12g இல் அடங்கும் அணுக்களின் எண்ணிக்கைக் குச் சமமான எண்ணிக்கையுடைய பதார்த்தத்தின் அளவு.
2. எந்தவொரு மூலத்தினதும் 12g இல் அடங்கும் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையுடைய பதார்த்தத்தின் அளவு.
3. 2g $H_2$ இல் அடங்கும் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையுடைய பதார்த்தத்தின் அளவு.
4. C - 12 இல் சமதானியின் 12g இலுள்ள C மூலக்கூறுகளின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையுடைய பதார்த்தத்தின் அளவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1. 10g கரையம் ஒன்று 100g கரைசலில் கரைந்துள்ள போது அதன் திணிவுப் பின்னம் 0.1 ஆகும்.
2. பொருள் ஒன்றின் நிறை வளியில் 20N ஆகும். அது முற்றாக நீரில் அமிழ்ந்துள்ள போது தோற்ற நிறை 8N எனில் நீரினால் வழங்கப்படும் மேலுதைப்பு 12N ஆகும்.
3. இரண்டு மாடுகள் ஒரு கம்பத்தில் கயிற்றால் கட்டப் பட்டுள்ளன. ஒரு மாடு 800N விசையுடன் வடக்காக இழுக்கும் போது மற்றைய மாடு 700N விசையுடன் கிழக்காக இழுக்கின்றது. எனில், கம்பத்தில் தொழிற்படும் விளையுள் விசை 1500N ஆகும்.
4. ஒரு பொருள் ஓய்விலிருந்து ஆரம்பித்து 4s இன் பின்னர் $12ms^{-1}$ வேகத்தை அடைந்தது எனில் பொருளின் இடப்பெயர்ச்சி 24N ஆகும்.

23) $^{23}_{11}Na$ இலுள்ள புரோத்தன், ,லத்திரன் , நியூத்திரன் முறையே
1. 11,11,12  2. 12,11,11  3. 12,11,12  4. 12,12,11

24) தாவர இழையங்களின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
a – செலுலோசாலான மெல்லிய கலச்சுவரைக் கொண்டது.
B – உயிருள்ள கலங்களைக் கொண்டது.
C - கலங்களுக்கிடையே கலத்திடைவெளி கொண்டது.
மேலுள்ளவற்றில் புடைக்கலவிழையத்தில் காணப்படும் இயல்புகளாவன
1. A மாத்திரம்  2. A யும் B யும்
3. A யும் C யும்  4. A,B, C அனைத்தும்

25) பொருள் ஒன்று 10 N , 15 N விசை p ஆகிய மூன்று விசைகளின் கீழ் சமநிலையில் காணப்படுகிறது. 10N , 15N விசைகளின் விளையுள் 12N ஆகும். விசை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக.
X. pயின் பெறுமானம் 12N ஆகும்.
Y. 10N,15N விசையின் தாக்கக் கோடுகள் சந்திக்கும் புள்ளியில் விசை pயின் தாக்கக்கோடு சந்திக்காது.
Z. 10N, 15N விசையின் தாக்கக் கோடுகள் சந்திக்கும் புள்ளியின் விசை pயின் தாக்கக்கோடு சந்திக்கும்.
1. X,Y  2. X,Z
3. Y,Z  4. X,Y,Z அனைத்தும்

26) மின்னெதிர்த்தன்மை முதலாம் அயனாக்கற் சக்தி கூடிய மூலகங்களைக் கொண்ட சோடி முறையே
1. H, He  2. Fe,He  3. Cl , Ar  4. F, Ar

27) $x + CuSo \longrightarrow XSO_4 + Cu$
X உலோகமாக அமைவது
1. Hg  2. Ag  3. Mg  4. Au

28) தாவரம் தொடர்பாக கீழ்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக.
A. பச்சைத்தாவரங்கள் சூரிய ஒளியில் மாத்திரம் ஒளித் தொகுப்பு மேற்கொள்ளும்.
B. பச்சைத்தாவரங்கள் இரவில் மாத்திரம் $co_2$ ஐ வெளிவிடும்.
C. தாவரங்களின் சுவாசத்தின் மூலம் $co_2$ வாயுவும் ஒளித் தொகுப்பின் மூலம் $o_2$ வாயுவும் இலைவாய்களினூடாக வெளிவிடப்படும்.
D. தாவரங்களில் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் போது வேறொரு அங்கியின் பங்களிப்பின்றி புதிய தாவரம் உருவாகும்.
மேலுள்ளவற்றுள் சரியான கூற்றுக்களாவன.
1. A,C மாத்திரம்  2. A,D மாத்திரம்
3. C,D மாத்திரம்  4. A,b,C அனைத்தும்

29) மின்காந்த அலையின் பயன்பாடு தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. தடித்த உருக்குத் தகடுகள், கொங்கிறீற்றுக் கீலங்களினூடாக ஊடுருவிச் செல்லும்.
B. செந்நிறக் கீழ் இருவிழியன், கமராக்களில் பயன்படுத்தப் படல்.
C. வங்கி போன்ற நிறுவனங்களில் நாணயத்தாள்களில் மறைந்திருக்கும் அடையாளங்களை சோதிக்க உதவும்.
D. விமானப்பயணிகளின் பயணப் பைகளைத் திறக்காமல் சோதிக்க உதவும்.
மேலுள்ளவற்றுக்குப் பயன்படும் மின்காந்த அலைகள்?
1. காமாக்கதிர் செங்கீழ்க்கதிர் புறஊதாக்கதிர் X கதிர்
2. புறஊதாக்கதிர் கட்புலனாகும் ஒளி காமாக்கதிர் X கதிர்
3. காமாக்கதிர் புறஊதாக்கதிர் செங்கீழ்க்கதிர் புறஊதாக்கதிர்
4. X கதிர் காமாக்கதிர் செங்கீழ் கதிர் புறஊதாக்கதிர்

30) இரும்பு பிரித்தெடுப்பின் போது ஊதுலையில் நடைபெறும் இரசாயனத்தாக்கம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது ( Fe – 56 ,O – 16,C – 12)

$$Fe_2 O_3 + 3 Co \longrightarrow 2Fe + 3 Co_2$$

160g $Fe_2O_3$ தாழ்த்தப்படும்போது வெளிவிடப்படும் $Co_2$ வாயுவின் திணிவு எவ்வளவு?
1. 44kg  2. 88kg
3. 132kg  4. 176kg

31) $H_2$, $O_2$,$Co_2$ வாயுக்களில் $H_2$ மாத்திரம் சேகரிக்கப் பயன்படும் முறை யாது?
1. நீரின் கீழ்முக இடப்பெயர்ச்சி
2. வளியின் மேன்முக இடப்பெயர்ச்சி
3. நீரின் மேன்முக இடப்பெயர்ச்சி
4. வளியின் கீழ்முக இடப்பெயர்ச்சி

32) நீர்நிலையியல் அமுக்கம் தொழிற்படும் உபகரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
a. வாகன உலர்த்தி
B. நீரியல் அமுக்கயாக்கு
C. ,ரசப்பாரமானி
D. வாகனத்தடுப்புத் தொகுதி
மேலுள்ளவற்றில் திரவங்களினூடு அமுக்கம் ஊடு கடத்தப் படுவதை விளக்கும் சந்தர்ப்பங்களாக அமைவது?
1. A B C  2. B C D
3. A C D  4. A B D


33) வித்துக்களும் பழங்களும் ஒரே வழிமுறையில் பரம் பலடைவதைக் காட்டும் கூட்டம்
1. மா, தோடை, தாமரை, தேங்காய்
2. எண்ணெய், எருக்கலை, பருத்தி, வேங்கை
3. மரமுந்திரிகை, விளா, றப்பர்
4. குன்றிமணி, கடல்மாங்காய், ஒக்கிட், நாயுருவி

34) பச்சை நிற இரசாயனப் பொருள் பின்வருவனவற்றுள் எது?
1. $KMno_4$  2. $CuSo_4$
3. $KClO_3$  4. $K_2Mno_4$

35) விலங்கு ஒன்றின் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
A. இடம்பெயர்வுக்காக ஐவிரல் அவயங்களைக் கொண்டது.
B. சூழல் வெப்பநிலை குருதியுடையவை.
C. வாழ்க்கை வட்டத்தைப் பூர்த்தி செய்ய நீர் அவசியம்.
D. சுரப்பிகளைக் கொண்ட மெல்லிய ஈரலிப்பான தோல் உடையவை. மேலுள்ள இயல்புகளைக் கொண்ட விலங்கு
1. சலமந்திரா  2. கடற்சிங்கம்
3. கடற்குதிரை  4. முதலை

36) $xH_2O_2 \longrightarrow yH_2O + zO_2$
x,y,z என்பவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே
1. 1, 2, 1  2. 2, 2, 1
3. 2, 1, 2  4. 1, 2, 2

37) A – H சீரான கோல் ஆகும். P,Q என்பவை சமநிறையுள்ள பொருட்களாகும். AH சமநிலையில் இருக்க செய்ய வேண்டியது.




1. பொருள் P ஆனது BI நோக்கி நகர்த்தப்பட வேண்டும்.
2. பொருள் Q ஆன்து EI நோக்கி நகர்த்தப்பட வேண்டும்.
3. பொருள் P ஆனது DI நோக்கி நகர்த்தப்பட வேண்டும்.
4. பொருள் Q ஆனது HI நோக்கி நகர்த்தப்பட வேண்டும்.

38) பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியில் கருக்கட்டல், உட்பதித்தல் செயற்பாடுகள் நடைபெறும் இடங்கள் முறையே
1. கருப்பைக்கழுத்து, கருப்பை
2. பலோப்பியன்குழாய், கருப்பைக்கழுத்து
3. பலோப்பியன்குழாய், கருப்பை
4. கருப்பை, பலோப்பியன்குழாய்

39) M இன் காபனேற்றின் இரசாயனச் சூத்திரம் $M_2Cl_3$ எனின் M இன் குளோரைட்டின் இரசாயனச் சூத்திரம் யாது?
1. MCl  2. $MCl_2$
3. $MCl_3$  4. $M_2Cl_3$

40) தாவரங்களில் நடைபெறும் அயன் மகரந்தச் சேர்க்கை தொடர்பாக பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. தாவரங்களில் புதியவகை இயல்புகள் தோன்ற வழி வகுக்கும்.
B. அங்கிகளின் கூர்ப்புக்கு வழிவகுக்காது.
C. இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் ஒரு படிமுறை ஆகும்.
இவற்றுள் சரியானவை
1. A யும் B யும்
2. B யும் C யும்
3. A யும் C யும்
4. A, B, C அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024

## வெளிநாடு செல்லும் முயற்சிக்கு அனுமதி கிடைக்கும்

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் மகர இராசி வாசகர்களே!**

வளர்ச்சியிலேயே குறிக்கோளாக இருக்கும் உங்களுக்கு இந்த சோபகிருது புத்தாண்டு நல்ல பலன்களையே அள்ளி வழங்கப் போகின்றது. ஏழரைச் சனியில், ஜென்மச்சனி விலகி குடும்பச் சனியின் ஆதிக்கத்தோடு கிரக நிலைகள் அமைந்துள்ளதால் இதுவரை ஏற்பட்ட தடைகள் அகன்றோடும். தக்க விதத்தில் பொருளாதார நிலையும் உயரும். ஏப்ரல் 22 ஆம் திகதி குரு பகவான் மேஷ இராசிக்குச் செல்கின்றார். அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும் அதன் பார்வை பலத்தால் நல்ல காரியங்கள் நடைபெறும். புத்தாண்டில் மூன்று முறை சனி, செவ்வாயின் பார்வை ஏற்படுகின்றது. அந்த நேரங்களில் கொஞ்சம் கூடுதல் கவனத்தோடு செயற்பட வேண்டும். 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். பாக்கிய ஸ்தானத்திற்கு கேது வருவதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற் சிக்கு அனுமதி கிடைக்கும். 3 இல் ராகு முயற்சிகளில் வெற்றி தரலாம். உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசாபுத்திகள் நடைபெற்றால் நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நடை பெறும். திசா புத்தி பலம் இழந்திருந்தால் செய்யும் காரியங்களில் சில தடுமாற்றங்கள் ஏற்படும். ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். அப்படிப்பட்ட சூழல் உருவாகும் பொழுது சுய ஜாதக அடிப்படையில் பரிகாரம் மற்றும் வழிபாடுகளைச் செய்தால் பலன் கிடைக்கும்.

**குருப்பெயர்ச்சி!**

சித்திரை 9 ஆம் திகதி (22.04.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவரது பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே சிக்கல்களும் சிரமங்களும் குறையும். மக்கள் போற்றும் விதம் மகத்தான வாழ்க்கை அமையும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் சூழல் உண்டு. குருவின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். அதன் விளைவாக ஒப்பற்ற புதிய தொழில் ஒன்றையும் தொடங்க முன்வருவீர்கள். கூட்டாளிகள் உங்களுக்கு கூடுதல் இலாபம் தர முயற்சிப்பர். பொது வாழ்விலும் உத்தியோகத்திலும் எதிர்பார்த்த பதவிகள், பொறுப்புகள் கிடைக்கும். குருவின் பார்வை 12 ஆம் இடத்தில் பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். அந்நிய தேச அழைப்புகள் வந்து மகிழ்விக்கும். மண் வாங்கலாமா?, மனை வாங்கலாமா?, இல்லை பொன், பொருள் வாங்கலாமா? என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு, வீடு கட்டிக் குடியேறும் யோகம் முதல் நாடு விட்டு நாடு செல்லும் யோகம் வரை வந்து சேரும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே நடைபெறும்.

**கும்பச் சனி!**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான கும்ப ராசியில் சனி பகவான் சஞ்சரிக்கின்றார். "இரண்டில் சனி வந்தால் திரண்ட செல்வம் வரும்" என்பர். எனவே பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவீர்கள். சிக்கல்களும் சிரமங்களும் விலகி இனித் தக்க பலன் கிடைக்கும். மக்கள் செல்வங்கள் மண மாலை சூட வழிபிறக்கும். பணி ஓய்விற்குப் பிறகும் கூட ஒரு சிலருக்கு பணிபுரியும் வாய்ப்புகள் கிடைக்கும். சனி பகவான் வழிபாட்டின் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் பெற்று வருகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். இந்த வக்கிர காலங்களில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். கூட்டு முயற்சிகளில் மாற்றம் ஏற்படும். குடும்ப பிரச்சினைகளில் சிக்கித் தவிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். சோம்பலின் காரணமாக பல நல்ல வாய்ப்புகளை நழுவ விட்டுவிடுவீர்கள். ஒவ்வொருநாளும் போவது ஒரு யுகமாக இருக்கும். மகரச் சனியின் ஆதிக்க காலத்தில் மீண்டும் ஜென்மச் சனியாக மாறுவதால் திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி!**

08.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் ராகுவும் 9 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 3 ஆம் இடத்து ராகுவால் முக்கிய திருப்பங்கள் ஏற்படும். முட்டுக்கட்டைகள் அகலும். முக்கிய புள்ளிகள் இல்லம் தேடி வந்து நல்ல காரியம் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர். உடன்பிறப்புகள் உறுதுணையாக




இருப்பர். இதுவரை முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை இப்பொழுது படிப்படியாகக் குறையும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை உயர்மட்ட அதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். 9 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பாக்கிய ஸ்தானம் பலப்படுகின்றது. தந்தை வழிச் சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். தர்ம காரியங்களுக்குச் சிந்தை மகிழச் செலவிடுவீர்கள். ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும். அருகில் இருக்கும் ஆலயங்களுக்கு மட்டுமல்லாமல் சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று சேவித்து வருவீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது. உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிக்க இல்லத்தினர்களின் ஒத்துழைப்பும் இனிய நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பொது வாழ்வில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

புத்தாண்டில் சீரும், சிறப்பும் வாய்க்க, செல்வ வளம் பெற அனுமன் கவசம் பாடி சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்!**

இந்தப் புத்தாண்டின் தொடக்கமே குடும்பச் சனியின் ஆதிக்கத்தில் இருப்பதால் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கணவன்-மனைவிக ளுள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அவர்கள் வெளிநாடு சென்று படிக்க விரும்பும் முயற்சிக்கும் வேலை பார்க்கும் முயற்சிக்கும் பக்கபலமாக இருப்பீர்கள். பணிபுரிபவர்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றங்கள் கிடைக்கும். இடம் வாங்கி மனை கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறப் போகின்றது. தாய் வழி ஆதரவும் தக்க விதத்தில் உண்டு. சனியின் வக்கிர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரித்தாலும் தெய்வ வழிபாடுகளால் திருப்தி ஏற்படும்.

**குரு-சனியின் வக்கிரம்!**

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் விரய ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான குரு வக்கிரம் பெறுவதால் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். "சில காரியங்களைச் செய்யப் பணம் தேவைப்படுகின்றதே" என்று நினைத்த நேரத்தில் பணம் கைக்கு வந்து சேரும். காரியத்தை தொடங்கி விட்டால் உதவி கிடைக்கும் சூழல் உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். நீண்டநாள் நிலுவையில் இருந்த வழக்குகள் சாதகமாக முடியலாம். ஆன்றோர், சான்றோர்களின் அறிவுரைகள் அவ்வப்போது கைகொடுக்கும். பரம்பரைத் தொழிலில் புதுமைகளைப் புகுத்தி அதை மீண்டும் தொடர நினைப்பீர்கள். தளர்ச்சி இல்லாத உழைப்பின் காரணமாக தனவரவு வந்தாலும் சேமிக்க இயலாமல் விரயமே அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வுடன் கூடிய மாற்றங்கள் வரலாம். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியிலும் 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் ஏற்படும். தொற்றுநோய் உபாதைகள் உருவாகலாம். தொடர் கடன் சுமை கூடும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். வளர்ச்சிக்கு குறுக்கீடாகச் சிலர் வருவர். பிரபலஸ்தர்களின் மூலம் சில பிரச்சினைகள் தலை தூக்கும். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். உத்தியோ கத்தில் உள்ளவர்கள் தங்களிடம் உள்ள பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் மனக் கவலைக்கு ஆளாக நேரிடும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 160





சாதாரணமாகப் பெரிய சகோதரர் வெளியில் போய் விட்டு வந்தால் இளையவர் கோட்டை வாசலில் வந்து நின்று வரவேற்று அழைத்துச் செல்வார்.

அண்ணனும் தம்பியும் ஒருவரையொருவர் கண்டதும் தழுவிக் கொள்ளும் காட்சி நீலகிரியும் பொதிகை மலையும் ஆலிங்கனம் செய்து கொள்வது போலிருக்கும்.

இருவரும் இரண்டு யானைகள் மீதோ அல்லது குதிரைகளின் மீதோ ஏறிக் கொண்டு அருகருகே சென்றார்களானால், அந்தக் காட்சியைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும்.

பழுவூர்ச் சகோதரர்களைச் சிலர் இரணியனுக்கும் இரண்யாட்சனுக்கும் ஒப்பிட்டு பேசுவார்கள். இன்னும் சிலர் 'சுந்தோப சுந்தர்கள்' என்பார்கள். இராமரையும் பரதரையும் ஒத்த அருமைச் சகோதரர்கள் என்றும் வீமனையும் அருச்சுனனையும் ஒத்த வீரச் சகோதரர்கள் என்றும் கூறுவோரும் உண்டு.

ஆனால் இன்றைக்குப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்த போது அவருடன் வந்த பரிவாரங்கள் வழக்கமான முழக்கங்களைச் செய்த போதிலும் வீதிகளில் குதூகல ஆரவாரம் இல்லை. ஜனக் கூட்டமும் அதிகமில்லை. சின்னப் பழுவேட்டரையர் கோட்டை வாசலுக்கு அண்ணனை வரவேற்பதற்காக வந்து காத்திருக்கவும் இல்லை.

ஆனால் தனாதிகாரி இதைப் பொருட்படுத்தாமல் நேரே தம்பியின் மாளிகையை நோக்கிச் சென்றார். ஏதோ ஒரு முக்கியமான காரியத்தில் இளையவன் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று அவர் எண்ணினார். ஒருவேளை சக்கரவர்த்தியின் உடல்நிலை ரொம்பக் கேவலமாகி விட்டதோ, அல்லது 'பெரிய காரியம்' தான் நடந்து விட்டதோ என்ற ஐயம் உண்டாயிற்று. ஆகையால், வழக்கத்தை விடத் துரிதமாகவே அவருடைய பரிவார ஊர்வலம் சென்று கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகையை அடைந்தது.

மாளிகை வாசலுக்குத் தமையனை வரவேற்க வந்த தளபதியின் முகத்தில் பரபரப்பும் கவலையும் காணப்பட்டன. தமையனுக்கு வணக்கம் செலுத்திப் பிறகு மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் மாளிகைக்குள் சென்றார்கள். நேரே அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்துக்குள் பிரவேசித்தார்கள்.

இருவரும் தனிப்பட்டதும், "தம்பி! காலாந்தகா! என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்? ஏதாவது விசேஷம் உண்டா? சக்கரவர்த்தி சுகமா?" என்று தமையனார் கேட்டார்.

சின்னப் பழுவேட்டரையராகிய காலாந்தககண்டர், "சக்கரவர்த்தி எப்போதும் போல் இருக்கிறார். அவரது சுகத்தில் அபிவிருத்தியும் இல்லை. சீர்கேடும் இல்லை!" என்றார்.

"பின் ஏன் வாட்டம் அடைந்திருக்கிறது உன் முகம்? ஏன் கோட்டை வாசலுக்கு வரவில்லை? ஊரும் ஒரு மாதிரி சலசலப்புக் குறைந்திருக்கிறதே!" என்று பெரியவர் கேட்டார்.

"அண்ணா! ஒரு சிறு சம்பவம் நடந்திருக்கிறது. பிரமாதம் ஒன்றும் இல்லை. அதைப் பற்றிப் பிற்பாடு சொல்கிறேன். தாங்கள் போன காரியங்களெல்லாம் எப்படி?" என்று காலாந்தககண்டர் கேட்டார்.


"நான் சென்றிருந்த காரியம் பூரண வெற்றிதான். அழைத்திருந்தவர்கள் அவ்வளவு பேரும் கடம்பூருக்கு வந்திருந்தார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது



ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்து வந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து 'உள்ளேவரலாமா' என்று கேட்டனர்.

தந்தை 'வாருங்கள்' என்றார்.

'நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது யாராவது ஒருவர் தான் வரமுடியும் என் பெயர் பணம்.இவர் பெயர் வெற்றி.இவர் பெயர் அன்பு. எங்கள் மூவரில் ஒருவர் தான் ஒரு வீட்டிற்குள் செல்ல முடியும் எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள் என்றார் பணம் எனப்படுபவர்.

குமரனின் தந்தை வெற்றியை அழைக்கலாம். நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம் என்றார்.

ஆனால் குமரனோ அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம். நம்மிடம் பணம் சேர்ந்து விட்டால் எல்லாவற்றையும் வெற்றி உட்பட அனைத்தையும் வாங்கலாம் என்றான்.

ஆனால் குமரனின் தாயோ 'வேண்டாம் அன்பையே அழைக்கலாம். அன்பு தான் முக்கியம் என்றாள்.

பின் மூவரும், "அன்பு உள்ளே வரட்டும்" என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும் பணமும் கூட உள்ளே நுழைந்தனர்.

உடனே குமரனின் அம்மா அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம் என்றார்.

அன்பு சொன்னார், நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால் மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம்.

ஆனால் அன்பான என்னை வரச் சொன்னதால் நான் இருக்கும் இடத்தில் தான் பணமும் வெற்றியும் இருக்கும். ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர்.

அன்பு உள்ளம் இருந்தால் நம் வாழ்வில் வெற்றியும் தேவையான வசதிகளும் தானாகவே வந்து விடும்.

அன்பே சிவம் அன்பே முக்கியம்.

இதையே வள்ளுவர்.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல் அது வெறும் எலும்பு தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால் அன்பு மனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது.
— செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மருத்துவக் கழிவுகளை எரியூட்ட பொருத்தமான இடத்தை வழங்குங்கள்

யாழ்.போதனா வைத்தியசாலையில் தேங்குகின்ற மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்குப் பொருத்தமான இடமில்லாததால் மிகப்பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற அறுவைச் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகளுக்காக எடுக்கப்படும் உடற்கூற்று மாதிரிகள், கருச்சிதைவுகள் என்பன மருத்துவக் கழிவுகளாக கருதப்படுகின்றன.

இவ்வாறு சேருகின்ற மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பாக எரியூட்ட வேண்டிய தேவையுள்ளது.

இதற்காக உரிய எரியூட்டிகள் இருக்கின்ற போதிலும் அதனைப் பொருத்தமான இடங்களில் பொருத்தி அதில் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு ஏற்ற இடத்தைத் தெரிவு செய்வதில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் மிகப்பெரும் இடர்பாட்டைச் சந்தித்துள்ளது.

இதன் காரணமாக, மருத்துவக் கழிவுகளை அகற்றமுடியாமல் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திருக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டபோது, மனிதாபிமான அடிப்படையில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பு நாவற்குழியில் மக்கள் குடியிருப்பு இல்லாத இடத்தில் இருக்கக்கூடிய தனது நிலத்தை வழங்கி, அதில் மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கு உதவி செய்திருந்தது.

எனினும் அதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்தால், அந்த இடத்தில் மருத்துவக் கழிவுகளை எரியூட்ட மாட்டோம் என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவித்துள்ளார்.

நல்லது பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும்போது அதற்கு உரிய மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அதேநேரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேருகின்ற மருத்துவக் கழிவுகள் முறையாக அகற்றப்பட்டு பாதுகாப்பான முறையில் எரியூட்டப்பட வேண்டும்.

இல்லையேல், யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைய வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

எனவே மேற்படி மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்குப் பொருத்தமான இடத்தை இனங்காண்பது அவசியமாகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் எம் மக்களே சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே எம்மோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தை பொதுமக்களாகிய நாமும் நம் மக்கள் பிரதிநிதிகளும் ஓரங்கட்டிவிட்டு இருந்துவிட முடியாது.

ஆகவே யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் சேருகின்ற மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்காகப் பொருத்தமான கூட்டமொன்றை ஏற்பாடு செய்து, அதில் மக்களின் ஆலோசனைகளைக் கேட்டு உரிய இடத்தை இனங்காண வேண்டும்.

இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் அவசியமாகும்.

## இந்தியா செய்த உதவியை எப்போதும் மறந்துவிட முடியாது

### பிரதமர் தினேஸ் குணவர்த்தன

இலங்கை பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்திருந்த பொழுது எமக்கு உதவி செய்தது இந்தியா என்பதை நாம் மறந்துவிட முடியாது.எனவே இலங்கைக்கும் இந்தியாவிற்கும் மிகவும் நெருக்கமான ஒரு உறவு இருக்கின்றது என்பதை யாராலும் மறந்துவிட முடியாது என பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா சீத்தா எலிய சீதையம்மன் ஆலயத்தின் புனித நீர்த் தடாக திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று சீதையம்மன் ஆலயத்தில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தியான மண்டபத்திற்கும் இந்திய மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.அதற்கு காரணம் அதற்கான நிதியை வழங்குகின்றவர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள்.

இது ஒரு புறம் எங்களுடைய நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இருக்கின்ற கலை கலாச்சார ரீதியான ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. எங்களுடைய இரு நாட்டிற்கான உறவு பல தசாப்தங்களை கடந்து செல்கின்றது என்றார்.(ம)

## புதிய தொடருந்து பாதை விரைவில் நிர்மாணம்

### அமைச்சர் பந்துல

(கொழும்பு)

நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து நுவரெலியா மற்றும் ராகலை வரை பயணிக்ககூடிய புதிய தொடருந்து பாதை வெகுவிரைவில் நிர்மாணிக் கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா பகுதிக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இந்த தகவலை வெளியிட்டார்.நுவரெலியா நகருக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தொடருந்து சேவை தேவையாக உள்ளது.

எனவே, மத்திய மாகாண ஆளுநர் காலத்தில் செயற்பட்ட நுவரெலியா - கந்தபளை தொடருந்து நிலையங்களுக்கு இடையில் தொடருந்து சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக புதிய ரயில் பாதையும் நிர்மாணிக்கப்படும்.நுவரெலியாவில் இருந்து கொழும்பு வரை மரக்கறிகளை கொண்டு வருவதற்கு நானுஓயா ரயில் நிலையத்தை மையப்படுத்தி பொருளாதார மத்திய நிலைய பிரிவொன்று அமைக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, நானுஓயா தொடருந்து நிலையத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர், நானுஓயா தொடருந்து நிலையத்திலிருந்து எல்ல வரை செல்வதற்கு காத்திருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் நட்பு ரீதியில் கலந்துரையாடினார். தொடருந்து நிலைய அதிகாரிகளையும் சந்தித்தார்.(ம-7)

## யாலவில் மிகப்பெரிய தந்தம் கொண்ட யானை உயிரிழப்பு

(கொழும்பு)

யால தேசிய சரணாலயத்தில் இருந்த மிகப்பெரிய தந்தம் கொண்ட யானையான தல கொட்டா உயிரிழந்தது.

40 வயதுடைய குறித்த யானை நீண்ட நாட்களாக நோய் நிலைமையினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிகிச்சை அளித்து வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாட்களுக்கு முன் லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்திற்கு அருகில் உயிரிழந்த நிலையில், யானையின் சடலம் மீட்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.யால தேசிய சரணாலயத்திற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்த மிருகமாக இந்த யானை காணப்பட்டது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** அம்பன், அம்பன் மருத்துவமனை, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், மணற்காடு, நடுக்குடத்தனை, பொற்பதி, வலிகண்டி, ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், சிதம்பரபுரம், வைரவ புளியங்குளம்- ஆதி விநாயகர் கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வவுனியாவில் விபத்து மாணவன் உட்பட இருவர் படுகாயம்

வவுனியாவில் மூன்று வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில், மாணவன் உள்ளிட்ட இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் இருந்து மன்னார் வீதி வழியாக துவிச்சக்கர வண்டியில் சென்ற மாணவன் ஐஸ்கிறீம் வீதியில் திரும்ப முற்பட்டபோது, அதே திசையில் வந்த பட்டா ரக வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மாணவன் மீது மோதியதுடன், எதிர்த் திசையில் வந்த மோட்டர் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மாணவன் மற்றும் மோட்டர் சைக்கிள் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்து தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## நீர்வீழ்ச்சியில் குதித்த 4 பிள்ளைகளின் தாய் பலி

(கொழும்பு)

குடும்பத் தகராறு தொடர்பில் திம்புள்ள - பத்தன பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய வந்த தாயொருவர், பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள டெவோன் நீர்வீழ்ச்சியில் குதித்து உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளது.

திம்புள்ள - பத்தன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகாவத்தை பகுதியில் வசிக்கும் லெட்சுமனன் நிஷாந்தினி (வயது - 34) என்ற நான்கு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு நீர்வீழ்ச்சியில் பாய்ந்து உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு தொடர்பில் முறையிடுவதற்கு இரு பிள்ளைகள் சகிதம் இவர் பொலிஸ் நிலையத்துக்கு வந்துள்ளார்.

முறைப்பாடு செய்ததையடுத்து ஒரு பிள்ளை சகிதம் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்றுள்ளார். அதன் பின்னர் குடிப்பதற்கு நீர் எடுத்துவருமாறு அந்த பிள்ளையிடம் கூறியுள்ளார்.பிள்ளை அங்கிருந்து சென்ற பின்னர் நீர்வீழ்ச்சியில் குதித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் 20 வரை இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை 400,000 ஐ எட்டியுள்ளது.

இது நாட்டின் சுற்றுலாத் துறையான்து மீட்சியின் பாதையில் உறுதியாக இருப்பதைக் குறிக்கிறது.இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) தற் காலிகத் தரவுகளின் படி ஏப்ரல் 01-20 வரையான காலப் பகுதியில் மொத்தம் 69,799 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர்.

முதல் மூன்று மாதங்களில் 335,679 சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஜனவரி முதல் ஏப்ரல் 20 வரை இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 405,478 ஆக இருந்தது. இந்த மாதத்தில் வந்த பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் இந்தியா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள்.அதன்படி, இந்தியாவிலிருந்து மொத்தம் 11,670 சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர், ரஷ்யாவிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10,593 ஆகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 07

மறுபக்கத்தில் பின்வரும் தகவல்களின் அடிப்படையில் இலங்கை கச்சதீவுக்கு உரிமை கோரியது. (1) வரலாற்று டச்சு காலனித்துவ வரை படபதிவுகள் யாழ்ப்பாண நகரத்தின் ஒரு பகுதியாக இத்தீவு காட்டப்பட்டுள்ளதென்றும். (2) இத்தீவு புனித அந்தோனியார் தேவாலயம் பாரம்பரியமாக யாழ்ப்பாண மறை மாவட்டத்திற்குச் சொந்தமானது என்றும் (3) 1876 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் நில அளவை அதிகாரிகள் கச்சதீவை இலங்கையின் ஒரு பகுதியாகக் குறித்துள்ளனர் என்றும் (4) இரண்டாம் உலகப்போரின் போது பிரித்தானிய அரச கடற்படை இலங்கை அரசிடம் (இந்தியா அரசிடம் அல்ல) இத்தீவில் கடற்படை பயிற்சிகளை நடத்த அனுமதி கோரியது என்றும் கூறி உரிமை கோரியது.

இந்திய அரசாங்கம் இத்தீவின் மீதான ராம்நாட் ஜமீன்தாரின் உரிமைகளை முழுமையாக நம்பவுமில்லை. மேலும் உண்மையில் தீவை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டவுமில்லை. இதன்அடிப்படையில் 1974 இல் கச்சதீவு மீதான இலங்கையின் இறையாண்மையை இந்தியா ஏற்றுக் கொண்டு அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

இன்று, தமிழகக் கடலோர மீனவர்களைப் பொருத்தமட்டில் இத்தீவு எந்த நாட்டின் (இலங்கையின் அல்லது இந்தியாவின்) கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதில் அக்கறை இல்லை. அவர்களுக்கு வாழ்வாதாரம் மட்டுமே முக்கியம். இலங்கை மீனவர்களைப் பொருத்தமட்டில் இந்திய இழுவைப்படகுகள் ஏற்படுத்துகின்ற தாக்கங்களினால் தமது தொழிலை சீரான முறையில் மேற்கொள்ள முடியாமல் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

அதாவது தமிழக மீனவர்களின் மீன்பிடி முறைதான் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் இயந்திர மயமாக்கப்பட்ட விசைப்படகுகளை (இழுவை மீன்பிடிமுறை) மீன்பிடிக்கு பயன்படுத்துகின்றனர்.

### கச்சதீவு ஒப்பந்தம் - இணையத் தகவல்

கச்சதீவு ஒப்பந்தம் பற்றி இணையத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "கச்சதீவு ஒப்பந்தம் என்பது இந்திய-இலங்கை இடையே உள்ள பாக்குநீரிணையில் அமைந்துள்ள, இந்தியாவுக்கு உரிமையான கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது குறித்தான ஒப்பந்தமாகும். "இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி மற்றும் இலங்கை பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவும் கையொப்பமிட்டு 8. ஜூலை 1974 ஆம் ஆண்டு முதல் செயலுக்கு வந்தது கச்சதீவு ஒப்பந்தம்.

1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தம் என்பது ஆதம் பாலத்திற்குத் தெற்கே மன்னார் வளைகுடா பரப்பு மற்றும் வங்காள விரிகுடாபரப்பு ஆகியவற்றில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ள கடல் உரிமைகளையும் கடல் எல்லைகளையும் வரையறுத்துக் கொள்ளும் ஒப்பந்தமாகும். 1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தப்படி, மன்னார் வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க உரிமையில்லை.

### கச்சதீவில் இந்தியர்களுக்கு உள்ள உரிமைகள்

கச்சதீவு ஒப்பந்தப்படி, இந்திய மீனவர்கள் கச்சதீவில் மீன்பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளலாம் என்றும் அங்குள்ள புனித அந்தோனியார் கோயில் திருவிழாவில் இந்தியர்கள் பங்கேற்கலாம் என்ற இரண்டு உரிமை கள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தப்படி, மன்னார் வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க உரிமையில்லை.

### 1974 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல்சார் (கச்சதீவு) ஒப்பந்தம் வரலாற்று நீர்நிலைகள் மற்றும் தொடர்புடைய விடயங்கள்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க கடற்பரப்பில் எல்லைக் கோட்டைத் தீர்மானிக்கவும் அதன் தொடர்பான சிக்கல்களையும் நீதியாகவும் சமமாகவும் தீர்த்துக் கொள்ள இருதரப்பினரும் செய்து கொண்ட உடன்பாடு.

இரு நாடுகளுக்கிடையே கடற்பரப்பில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கும் எண்ணத்துடன் சிக்கல் முழுவதையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து, வரலாறு உட்பட பிற ஆதாரங்களுடன் சட்டமுறைகளையும் கணக்கில் எடுத்து நோக்கிய பின்னர், இந்திய அரசும் இலங்கை அரசும் பின்வரும் உடன்பாட்டுக்கு வருகின்றன.

அவர்கள் பின்வருமாறு ஒப்புக் கொண்டனர்:

சரத்து 1: பாக்கு நீரிணை முதல் ஆதாம்பாலம் வரையிலான கடற்பரப்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எல்லையானது, பின்வரும் நிலைகளில் அதில் கொடுத்துள்ள ஒழுங்குக்கு அமைய, நெடுங்கோட்டாலும் சமாந்தர கோட்டாலும் latitude சுட்டிய நிலைகளை ஒட்டிய பெரும் வட்டங்களின் இணைப்புக் கோடே, இந்திய-இலங்கை எல்லைக் கோடாகும்.

தானம் 1: 10° 05' வடக்கு, 80° 03 கிழக்கு

தானம் 2: 09° 57' வடக்கு, 79° 35' கிழக்கு

தானம் 3: 09° 40.15' வடக்கு, 79° 22.60' கிழக்கு

தானம் 4: 09° 21.80' வடக்கு, 79° 30.70' கிழக்கு

தானம் 5: 09° 13' வடக்கு, 79° 32' கிழக்கு

தானம் 6: 09° 06' வடக்கு, 79° 32' கிழக்கு




முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி மற்றும் முன்னாள் இலங்கை பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவும் கையொப்பமிட்டு 8,ஜூலை 1974 ஆம் ஆண்டு முதல் செயலுக்கு வந்தது கச்சதீவு ஒப்பந்தம்.

சரத்து -2 : சரத்து 1 இல் வரையறுக்கப்பட்ட புவியியல் பெரு வட்ட நிலைகளையும் இவற்றை இணைக்கும் நேர்கோடுகளையும் இரு அரசுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்கள் ஏற்றுக்கொண்டு ஒப்பமிட்டுள்ளனர். எனவே, இரு அரசுகளால் வரையறுக்கப்பட்ட புவியியல் தொடர்ச்சியான நேர்வரை கோட்டின் நிலைகள் (தானங்கள்) உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

சரத்து-3 : மேற்கூறியநிலைகளின் உண்மையான இருப்பிடம் கடல் நீர்ப்பரப்பிலும் கடல் அடிவாரத்திலும் (கடற்படுகையிலும்) எங்கெங்கு உள்ளன என்பதை இரு அரசுகளின் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்கள் ஒருங்கிணைந்து தீர்மானிப்பர்.

சரத்து-4 : மேற்கூறியவாறு உறுதி செய்யப்பட்ட எல்லைக் கோட்டில், அந்தந்த நாடுகளின் பக்கம் உள்ள நீர்ப்பரப்பு, தீவுகளின் பரப்பு, கண்டமேடை, கடலின் அடிப்பரப்பு ஆகியவற்றை அந்தந்த நாடுகள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் இறையாண்மை செலுத்தவும் உரிமை கொண்டவை.

சரத்து-5 : மேற்கூறிய 4 ஆம் சரத்துக்கமைய, இந்திய மீனவர்களும் வழிபாட்டுக்குச் செல்லும்பயணிகளும் கச்சதீவுக்கு இது நாள்வரை வந்து போனது போல் வந்து போகவும் கச்சதீவை அனுபவிப்பதற்கும் முழு உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

இந்த நோக்கங்களுக்காக இலங்கை அரசிடமிருந்து பயண ஆவணங்களோ, நுழைவு அனுமதிகளோ இவர்கள் பெற வேண்டியதில்லை.

சரத்து-6 : இந்தியஇலங்கைப் படகுகளும் கப்பல்களும் கச்சதீவுக்குச் சென்று வர என்றும் உள்ள மரபுவழி உரிமைகள் தொடர்ந்து நீடிக்கும்.

சரத்து -7 : இப்பகுதிக் கடலினுள் பெற்றோலியம், இயற்கை வாயு, மற்றும் வேறு வகையான உலோகங்களும் கடல் பூமிக்குள் மணல், கனிமம் போன்றவைகளும் கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வளங்கள், எல்லையின் இருபகுதிகளிலும் இருந்தால், அவற்றை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அவற்றின் மூலம் கிடைக்கின்ற வருவாயினைப் பகிர்ந்து கொள்வதற்கும் இந்திய அரசும் இலங்கை அரசும் உடன்கூடி, கலந்து பேசி, உடன்பாடு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகே அந்த வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை இரு நாடுகளுக்கும் உரித்தாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெப்பமான...

மண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

வடமேற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை, இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவதானமாக இருக்குமாறு அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அந்த பகுதிகளில் மனித உடலுக்கான வெப்பம் அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7)

## மேற்கொள்ளப்...

ளார்.

பாராளுமன்றத்தில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் நீதியமைச்சர் ஜனாதிபதியை சந்திப்பார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உத்தேச சட்டத்தில் எவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ளலாம் என்பது குறித்து கலந்துரையாடவே நீதியமைச்சர் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் எனினும் எவ்வாறான மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம் என்பது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

பாராளுமன்றத்தில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டதும் அனைத்து கரிசனைகளிற்கும் தீர்வை காணமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-7)

## 11 மில்லியன்...

ச்சு தெரிவித்துள்ளது.

5 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவுக்காக இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய, ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடலுக்காக 20 ஆயிரம் ரூபாயும், 2 ஹெக்டேயருக்கு 40 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. (ம-7)

## மாணவர்களை...

போதை பாக்கு பக்கெட்டுக்கள் கோப்பாய் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரெழுவைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே குற்றச்சாட்டில் சந்தேகநபரின் உறவினர்கள் முன்னர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர். (ம-7,33)

## சம்பவத்தை...

இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் இவரின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

100 வயது மூதாட்டி ஒருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் நெடுந்தீவில் நடமாடிவிட்டு நேற்று முன்தினம் காலை அங்கிருந்து வெளியேறி புங்குடுதீவில் தங்கி நின்ற வேளை நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து அதிகளவு தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

அதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டபோதே சந்தேகநபர் தானே கொலை செய்ததாக ஒப்புக் கொண்டார்.

"நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன்.

அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன்.

அதனால் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு [illegible] யிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக் கொண்டு தப்பிக்க எண்ணினேன்.

நகைகளை மட்டும் அபகரித்துச்சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்" என்று சந்தேகநபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்றுப் பொருட்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-7,9,33)

## 48 மணிநேர...

நிலையில் குறித்த வீட்டில் கடந்த இரு தினங்கள் தங்கியிருந்த 51 வயதான நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொலையானவர்களின் நகைகள், கையடக்க தொலைபேசிகள் என உடைமைகள் சில மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் சந்தேகநபரை முற்படுத்திய பொலிஸார் 48 மணித்தியாலத்திற்கு தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க அனுமதி கோரினர்.

அதனை ஏற்றுக் கொண்ட மன்று, 48 மணிநேர விசாரணையின் பின் மன்றில் மீண்டும் சந்தேகநபரை முற்படுத்துமாறு பொலிஸாருக்கு பணித்தது. (ம-7,33)

## கொலை...

ஊர்வலத்தின் முடிவில் நெடுந்தீவு பிரதேச செயலாளர், நெடுந்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரிடம் மகஜரும் கையளிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு மாவிலிதுறைக்கு முன்பாக உள்ள வீட்டில் தங்கியிருந்த ஐவரை வெட்டிக்கொலை செய்து ஒருவரை காயமடைய செய்த சம்பவம் தொடர்பான குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பு எங்கே சென்று கொண்டு இருக்கிறது போன்ற பல கேள்விகளை தாங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெறவுள்ளது. (ம-7,33)

## இலங்கையின்...

விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளது.

சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமத்தின் தலைவர் மியாவ் ஜியான்மின் உள்ளிட்ட குழுவினர் கடந்த சனிக் கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதியிடம் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த சந்திப்பின் போது பல முக்கிய முதலீட்டு முன்மொழிவுகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையில் தனியொரு பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர் என்ற வகையில், சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம் ஏற்கெனவே 2 பில்லியன் டொலர்களை இலங்கையில் முதலீடு செய்துள்ளதாக சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்தோடு பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கை ஓரளவிற்கு மீண்டுள்ளதன் பின்னர் மேற்கொள்ளப்படும் முதலாவது நேரடி வெளிநாட்டு முதலீட்டு திட்டமாக தெற்காசிய வர்த்தக மற்றும் தளவாட மையத்தை கூட்டாக கட்டமைக்க சீன மேர்ச்சன்ட்ஸ் குழுமம், இலங்கை துறைமுக அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க் முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15351)

**076 825 7716 (ஆகாஸ்)**

## வேலையாள் உடன் தேவை

Happy Home Restaurant & Guest House

நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கு வேலையாள் தேவை

- Fried Rice Maker
- தங்குமிட வசதி , சாப்பாடு வழங்கப்படும்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பொருத்தமானவர்கள் முற்பகல் 11 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நேரில் வரவும் (C-6414)

தெல்லிப்பழை றோட், வட்டுக்கோட்டை

**076 543 3338, 077 438 6508**

நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

## சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567

[C-6417] (குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## மாணவி உயிரிழப்பு

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் புதிதாக அமைக்கப்பட்ட பலாவெலை பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட ரம்புக்கந்த தோட்டத்தில் பாடசாலை மாணவியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரியில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் தமிழ்மொழிமூலப் பிரிவில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் க. ணேசன ருக்ஷானி (வயது 15) என்ற மாணவி, இம் முறை எதிர்வரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15350)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15350)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15311)

**076 755 8606 ,077 638 5683**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15345)

## வாடகைக்கு

பருத்தித்துறை நகரின் மத்தியில் உள்ள கட்டிடம் நிறுவனங்களிற்கு, தன்னார்வ நிறுவனங்களிற்கு வாடகைக்குண்டு

**074 388 1341**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் மாம்பழ சந்திக்கு அருகாமையில் சிறிய வீட்டுடன் கூடிய 01 பரப்பு காணி விற்பனைக்குண்டு (15346)

**077 162 2772**
**077 919 2756**

## சலூன் வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் சிகையலங்காரிப்பு நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (15348)

தங்குமிட வசதி வழங்கப்படும்

**077 979 9855**

## யாழ்-கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் Village Hotel (வல்வெட்டித்துறை) எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதனை அறியத்தருகின்றோம்.


Airport Pickup Drop Service

**077 544 8503**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நில்ப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை



முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.

**076 911 9371**
**076 165 3129**

(15311)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். நாவற்குளி A9 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு உள்ள சூழல்
- நன்னீரூற்று
- 1 பரப்பின் விலை 650,000/- மட்டும்

**076 436 5814**
**077 065 4525**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.